## நேரடி விற்பனையில் நிகரற்ற லாபம்...

70 சென்ட்...நான்கு மாதம்...ரூ.49 ஆயிரம் !



சரவணன்



அறுவடைக்கு தயாராகி வரும் நெல்...

70 சென்ட் நிலத்தில் ஆடுதுறை-36, பவானி பொன்னி ரகங்களை சாகுபடி செய்ய சரவணன் சொல்லும் செலவு-வரவுக் கணக்கு...

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| பசுந்தாள் உரம் | 880 | |
| உழவு, பரம்படிக்க | 1,200 | |
| விதை | 1,000 | |
| நாற்று பறிப்பு, நடவு | 1,650 | |
| களை எடுக்க | 2,100 | |
| பிண்ணாக்கு, இடுபொருட்கள் | 2,000 | |
| பராமரிப்பு, இதர செலவுகள் | 3,500 | |
| அறுவடை | 750 | |
| ஆடுதுறை-36 மூலம் வரவு | | 14,100 |
| பவானி பொன்னி மூலம் வரவு | | 35,000 |
| மொத்தம் | 13,080 | 49,100 |
| நிகர லாபம் | | 36,020 |

நாடு முழுக்க இருக்கற விவசாயிகளோட நீண்ட கால கோரிக்கையே.. 'விளைபொருளுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும்'. ஆனா, இந்த விஷயத்துல அரசு இயந்திரம் துளிகூட அசைஞ்சு கொடுக்கவில்லை. அதுக்காக நாம காத்திருக்க முடியுமா? உற்பத்திச் செலவைக் குறைத்தல், மதிப்புக் கூட்டல், நேரடி விற்பனை மூணு விஷயத்தையும் கையில எடுத்துக்கிட்டு, நானே களத்துல இறங்கினேன்... இப்ப கட்டுப்படியான விலையைக் கைப் பிடித்துவிட்டேன்."

உற்சாகமாக சொல்கிறார் திருவண்ணாமலை மாவட்டம், பொற்குணம் கிராமத்தில் விவசாயத்தை மேற்கொண்டிருக்கும் சரவணன். நெல் சாகுபடியில் இறங்கியுள்ள இவர், உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக கையில் எடுத்திருக்கும் மிகமுக்கியமான ஆயுதம்...

இயற்கை வழி விவசாயம்!

"இதுதான் சொந்த ஊர்.அப்பாவுக்கு திருவண்ணாமலையில வேலை நிலத்தை குத்தகைக்கு விட்டுட்டு குடும்பத்தோட நகரத்துலேயே தங்கிவிட்டோம்.காலேஜ் படிப்பை முடிச்சுட்டு,

பிரிண்டிங் பிரஸ் வைத்து இருக்கிறேன்.அது மூலமா எனக்கு 'குக்கூ' அமைப்பைச் சேர்ந்தவங்க பழக்கமானாங்க.

அவங்க மூலமாதான் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்,இயற்கை வழி விவசாயம் எல்லாத்தையும் பற்றி தெரிந்து கொண்டேன்.இயற்கை விவசாயம் மேல ரொம்ப ஆர்வம் வந்ததும் எங்க கிராமத்துல இருக்குற ஏழு விவசாயிகள அழைச்சுட்டு வந்து,'குக்கூ' மூலமா இயற்கை வழி விவசாயப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தேன். அதுலதான் விஷமில்லாத விவசாயத்தைப் பற்றி நானும் முழுசா கற்றுக்கொண்டேன்”

நம்பிக்கை கொடுத்த நெல்!

"குத்தகைக்கு விட்டிருந்த ஆறு ஏக்கர் நிலத்துல 40 சென்ட் நிலத்தை மட்டும் கேட்டு வாங்கி, சோதனை முயற்சியா இயற்கை முறையில நெல் சாகுபடியில இறங்கினேன். அதுல 7 மூட்டை மகசூல் கிடைத்தது. அடுத்து ஒண்ணரை ஏக்கர்ல சாகுபடி செய்து நல்ல மகசூல் எடுத்தேன். இதைப் பாத்துட்டு எங்க கிராமத்துல நிறைய பேர் இயற்கை விவசாயத்துல ஆர்வமாகவும், நம்மாழ்வார் அய்யாவை அழைச்சுட்டு வந்து, பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தேன்.

பெருகிய மண்புழுக்கள்!

பஞ்சகவ்யா, மூலிகைப் பூச்சிவிரட்டி இதோட, 'பசுமை விகடன்' மூலமா ஜீவாமிர்தம் மாதிரியான இடுபொருட்களையும் தயாரிக்க தெரிந்து கொண்டேன், இப்ப எனது வயல்ல அதையெல்லாம் பயன்படுத்துகிறேன். நான் விவசாயத்துக்கு வந்தபிறகு, ஒரு மண்புழுகூட என் நிலத்துல தட்டுப்படாது. இப்பொழுது ஏகப்பட்ட மண்புழுக்கள் இருக்கு. ஆரம்பத்துல கொஞ்ச நாள் வரைக்கும் பூச்சிவிரட்டி தயாரித்து உபயோகப்படுத்தினேன். இப்பொழுது... பூச்சிகளே இல்லை.

போன போகம் வரைக்கும் டீலக்ஸ் பொன்னியைத்தான் சாகுபடி செய்து கொண்டு இருந்தேன். இந்தத் முறை, பவானி பொன்னிங்கற ரகத்தை 45 சென்ட் நிலத்துலயும், குண்டு ரகத்தை (ஆடுதுறை-36) 25 சென்ட் நிலத்துலயும் போட்டேன். குண்டு நெல் அறுவடை செய்தாயிற்று. பவானி பொன்னி அறுவடைக்குத் தயாரா இருக்கு. அரிசியா அரைச்சுதான் விலைக்குக் கொடுக்கிறேன். அதனால எனக்கு கூடுதல் லாபம் கிடைக்குது. இயற்கை அரிசிங்கிறதால சுவையும் நல்லா இருக்கு. அதனால நண்பர்கள் தேடி வந்து வாங்கிக்கறாங்க" என்று பெருமையோடு சொன்னவர், 70 சென்ட் நிலத்துக்கான சாகுபடிப் பாடத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

70 சென்ட்டுக்கு 25 கிலோ விதைநெல்!

'ஒவ்வொரு நெல் ரகத்துக்கும் வயதுதான் வித்தியாசப்படுமே தவிர, சாகுபடி முறைகள் ஒன்றுதான். பவானி பொன்னி ரகத்துக்கு வயது 135 நாட்கள்; ஆடுதுறை-36 ரகத்துக்கு வயது 115 நாட்கள். இந்த ரகங்கள் அனைத்து வகை மண்ணிலும் நன்றாக வரும். அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றவை. 70 சென்ட் நிலத்தில் சாகுபடி செய்வதற்கு மொத்தம் 25 கிலோ விதைநெல் தேவைப்படும் (இவர் 45 சென்ட் நிலத்துக்கு பவானி பொன்னி ரகத்தில் 15 கிலோ விதையையும், 25 சென்ட் நிலத்துக்கு ஆடுதுறை-36 ரகத்தில் 10 கிலோ விதையையும் பயன்படுத்தியுள்ளார்).

2 சென்டில் நாற்றங்கால்!

நாற்றங்கால் தயாரிக்க,2 சென்ட் நிலத்தில் களைகளை அகற்றி, மூன்று சால் மினி டிராக்டரில் உழவு செய்து சேறாக மாற்றி சமப்படுத்த வேண்டும். பிறகு, 2 கிலோ கனஜீவாமிர்தம், 2 கிலோ வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை கலந்து தூவ வேண்டும்.

விதைநெல்லை சணல் சாக்கில் இட்டு ஒரு பகல் முழுவதும் தண்ணீரில் ஊறவைத்து, இரவு கரையேற்றி வைக்க வேண்டும். இதேபோல மறுநாளும் செய்துவிட்டு... மூன்றாம் நாள், 50 லிட்டர் தண்ணீர், 5 லிட்டர் பஞ்சகவ்யா, 50 கிராம் சுண்ணாம்பு ஆகியவை கலந்த கரைசலில் விதைகளை நனைத்து, பிறகு விதைக்க வேண்டும்.

மழை... கவனம்!

விதைத்த பிறகு, வயலில் இருந்து தண்ணீரை வடித்துவிட வேண்டும். விதைத்த அன்று 'மழை பெய்யலாம்' என எதிர்பார்த்தால், தண்ணீரை வடிக்கக் கூடாது. தண்ணீரை வடித்துவிட்டால், மழை காரணமாக விதைகள் புரண்டு விடும். தொடர்ந்து 3, 5 மற்றும் 7-ம் நாட்களில் தண்ணீர் கட்டி, ஒரு மணி நேரம் வைத்திருந்து வடித்துவிட வேண்டும். 8-ம் நாள்... தண்ணீரோடு 5 லிட்டர் பஞ்சகவ்யாவைக் கலந்து விடவேண்டும். 20 முதல் 22 நாட்களில் நாற்று தயார் ஆகிவிடும். நாற்றைப் பறிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு 12 லிட்டர் தண்ணீரில், 2 லிட்டர் புளித்த மோரைக் கலந்து தெளிக்க வேண்டும்.

அடியுரத்துக்கு பசுந்தாள்!

நாற்றங்கால் தயாரிப்புக்கு 20 நாட்கள் முன்பாகவே, 70 சென்ட் நிலத்தை சாகுபடிக்காக தயாரிக்க ஆரம்பித்துவிட வேண்டும். ஒரு உழவு செய்து 10 கிலோ சணப்பு, 10 கிலோ தக்கைப்பூண்டு ஆகியவற்றைக் கலந்து விதைக்க வேண்டும். 40-ம் நாளில் பூவெடுக்கும். அதன் பிறகு, மடக்கி

மூன்று சால் உழவு செய்து, சேறாக மாற்றி பரம்படிக்க வேண்டும். 100 கிலோ கனஜீவாமிர்தம், 20 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 10 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கு ஆகியவற்றை நிலத்தில் பரவலாக இட வேண்டும். பிறகு, அரையடிக்கு ஒரு குத்து வீதம், குத்துக்கு இரண்டு, மூன்று நாற்றுகளாக நடவு செய்ய வேண்டும். தொடர்ந்து வாரம் இருமுறை பாசனம் செய்ய வேண்டும். வாரம் ஒரு முறை 25 லிட்டர் அமுதக்கரைசலை பாசன நீரில் கலந்துவிட வேண்டும்.

ஊட்டத்துக்கு பஞ்சகவ்யா!

நடவு செய்த 20-ம் நாள் களை எடுத்து, மறுநாள் 10 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 10 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கு இரண்டையும் கலந்து வயலில் தூவ வேண்டும். பிறகு, 60 லிட்டர் தண்ணீரில் 12 லிட்டர் பஞ்சகவ்யாவைக் கலந்து வயல் முழுவதும் தெளிக்க வேண்டும். 35-ம் நாளில் களை எடுத்து, மறுநாள் இதேபோல பிண்ணாக்குக் கலவையை இட்டு, பஞ்சகவ்யாவைத் தெளிக்க வேண்டும். இயற்கை முறையில் சாகுபடி செய்யும்போது பூச்சிகள், நோய்கள் தாக்குவதில்லை. கதிர் பிடித்த பிறகு 65 லிட்டர் தண்ணீரில், 6 லிட்டர் தேமோர்க் கரைசலைக் கலந்து தெளிக்க வேண்டும்.ஆடுதுறை-36 ரகம்... 90 நாளில் கதிர் பிடித்து, 105-ம் நாளுக்கு மேல் முற்றி, 115-ம் நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும். பவானி பொன்னி ரகம்... 110-ம் நாளில் கதிர் பிடித்து, 125-ம் நாளில் முற்ற ஆரம்பித்து, 135-ம் நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும்.'

70 சென்டில் 25 மூட்டை!

நிறைவாக மகசூல் மற்றும் வருமானம் பற்றிப் பேச ஆரம்பித்த சரவணன், "இரண்டு ரகத்துலயுமே ஒவ்வொரு தூர்லயும் இருபத்தஞ்சுல இருந்து முப்பது சிம்பு வரை இருக்கும். ஒவ்வொரு சிம்புலயும் இருநூறுல இருந்து இருநூற்று இருபது மணிகள் இருக்கும். ஆடுதுறை-36 ரகத்தை அறுவடை பண்ணினப்போ பத்து மூட்டை

(76 கிலோ மூட்டை) கிடைச்சுது. பவானி பொன்னியில 15 மூட்டை கிடைத்தது.

அரிசியா அரைச்சா... ஒரு மூட்டை நெல்லுக்கு நாப்பத்தஞ்சுல இருந்து அம்பது கிலோ வரை அரிசி கிடைக்கும். சராசரியா 47 கிலோனு வெச்சிக்கிட்டா... ஆடுதுறை-36 ரகத்துல 470 கிலோ அரிசியும், பவானி பொன்னியில 700 கிலோ அரிசியும் கிடைக்கும். அரிசி தயாரிக்கறதுக்கு பணம் கொடுக்கறதில்ல. அதுக்குப் பதிலா தவிட்டை எடுத்துக்குவாங்க. ஆடுதுறை-36 ரக அரிசி கிலோ 30 ரூபாய்க்கும், பவானி பொன்னி கிலோ 50 ரூபாய்க்கும் விலை போகும். அந்தக் கணக்குல பாத்தா, ரெண்டு அரிசி மூலமா 49 ஆயிரத்து 100 ரூபாய் வருமானம் கிடைக்கும். எல்லா செலவும்

போக 36 ஆயிரம் ரூபாய் வரை லாபமா கிடைக்கும்" . "இப்ப சொல்லுங்க, கட்டுப்படியான விலையை நான் கைபிடிச்சுட்டேன்கிறது உண்மைதானே!"

**தொடர்புக்கு**

சரவணன்

பொற்குணம் கிராமம்

திருவண்ணாமலை மாவட்டம்

அலைபேசி (செல்போன்): 94436-24010

ஆதாரம் : www.vikatan.com பசுமை விகடன் வெளியிட்டான தேதி, 25.10.2011